பேரவள்சீதையென்றுவடிவெலாம்பேசலுற்றாள். (௬௮)

காமரூறும்பாடல்கன்னொணக்கனிந்தவின்சொற்
றேமலர்திருந்தகூந்தற்றேவர்க்குமணங்காமென்னத்
தாமரையிருந்ததையல்சேடியாந்தரமுமல்லள்
யாமுரைவழங்குமென்பதேழைமைப்பாலதன்றோ. (௬௯)

மஞ்சொக்குமளகமோதிமழையொக்கும்வடித்தகூந்தல்
பஞ்சொக்குமடிகள்செய்யபவளத்தின்விரல்களைய
அஞ்சொற்களமுதிலள்ளிக்கொண்டவள்வதனமைதீர்
கஞ்சத்தினளவிற்றேனுங்கடலினும்பெரியகண்கள். (௭௦)

ஈசனார்கண்ணின்வெந்தானென்னுமிம்முதைச்சொல்லிவ்
வாசநாறோதியாளைக்கண்டனன்வல்லவாற்றால்
பேசலாந்தகைமைத்தல்லாப்பெரும்பிணிபிணிப்பநீண்ட
ஆசையாலழிந்துதேய்ந்தானநங்கனவ்வுருவமம்மா. (௭௧)

தெவ்வுலகத்துங்காண்டிசிரத்தினிற்பணத்தினோர்கள்
அவ்வுலகத்துங்காண்டியலைகடலுலகிற்காண்டி
வெவ்வுலையுற்றவேலைவாளினைவென்றகண்ணாள்
இவ்வுலகத்தாளங்கம்யாவர்க்குமெழுதொணாதாள் (௭௨)

தோளையேசொல்லுகேனோசுடர்முகத்துலவுகின்ற
வாளையேசொல்லுகேனோவல்லவைவழுத்துகேனோ
மீளவுந்திகைப்பதல்லாற்றனித்தனிவிளம்பலாற்றேன்
நாளையேகாண்டியன்றேநானுனக்குரைப்பதென்னோ. (௭௩)

வில்லொக்குநுதலென்றாலும்வேலொக்கும்விழியென்றாலும்
பல்லொக்குமுத்தென்றாலும்பவளத்தையிதழென்றாலும்
சொல்லொக்கும்பொருளொவ்வாவாற்சொல்லலாமுவமையுண்டோ
நெல்லொக்கும்புல்லென்றாலுநேருரைத்தாகவற்றே. (௭௪)

இந்திரன்சசியைப்பெற்றானிருமூன்றுவதனத்தோன்றன்
தந்தையுமுமையைப்பெற்றான்றாமரைச்செங்கணானும்
செந்திருமகளைப்பெற்றான்சீதையைப்பெற்றாய்நீயும்
அந்தரம்பார்க்கினன்மையவர்க்கில்லையுனக்கேயையா. (௭௫)

பாகத்திலொருவன்வைத்தான்பங்கயத்திருந்தபொன்னை
ஆகத்திலொருவன்வைத்தானந்தணனாவில்வைத்தான்
மேகத்தின்மின்னைமுன்னைவென்றநுண்ணிடையைநீயும்
மாகத்தோள்வீரபெற்றாலெங்ஙனம்வைத்துவாழ்தி. (௭௬)

பிள்ளைபோல்பேச்சினாளைப்பெற்றபின்பிழைக்கலாற்றாய்
கொள்ளைபோகின்றசெல்வமவளுக்கேகொடுத்தியைய
வள்ளலேயுனக்குநல்லேன்மற்றுநின்மனையில்வாழும்
கிள்ளைபோன்மொழியார்க்கெல்லாங்கேடுசூழ்கின்றேனன்றே. (௭௭)

தேர்தந்தவல்குற்சீதைதேவர்தமுலகினிம்பர்
வார்தந்தகொங்கையார்தம்வயிறுதந்தாளுமல்லள்
தார்தந்தகமலத்தாளைத்தருக்கினார்கடையச்சங்க
நீர்தந்ததனைவெல்வானிலந்தந்ததிரம்பிற்றன்றே. (௭௮)

மீன்கொண்டோடும்வேலைமேகலையுலகமேத்தத்
தேன்கொண்டோடுங்கூந்தற்சிற்றிடைச்சீதையென்னும்
மான்கொண்டோடுநீயுன்வாள்வலியுலகங்காண
யான்கொண்டோடும்வண்ணமிராமனைத்தருதியென்பால். (௭௯)

தருவதுவிதியேயென்றாற்றவம்பெரிதுடையோனும்
வருவதுவருநாளன்றிவந்துகைகூடவற்றோ
ஒருபதுமுகமுங்கண்ணுமுருவமுமார்புந்தோள்கள்
இருபதும்படைத்தசெல்வமெய்துவதினிநீயெந்தாய். (௮௰)

இன்னவடன்னையுன்பாலுய்ப்பலென்றெடுக்கலுற்ற
என்னையவ்விராமன்றம்பியிடைபுகுந்திலங்குவாளால்
முன்னைமூக்கரிந்துவிட்டான்முடிந்ததென்வாழ்வுமுன்னின்
பின்னையப்பிழைநீப்பான்றுணிந்தனெனென்னச்சொன்னாள். (௮௧)

கோபமுமறனுமானக்கொதிப்புமென்றினையவெல்லாம்
பாபநின்றிடத்துநில்லாப்பெற்றிபோற்பற்றுவிட்ட
தீபமொன்றொன்றையுற்றாலென்னலாஞ்செயலிற்புக்க
தாபமுங்காமநோயுமாருயிர்கலந்தவன்றே. (௮௨)

கரனையுமறந்தான்றங்கைமூக்கினைக்கடிந்துநின்றான்
உரனையுமறந்தானுற்றபழியையுமறந்தான்வெற்றி
அரனையுங்கொண்டகாமனம்பினான்முன்னைப்பெற்ற
வரனையுமறந்தான்கேட்டமங்கையைமறந்திலாதான். (௮௩)

சிற்றிடைச்சீதையென்னுநாமமுஞ்சிந்தைதானும்
உற்றிரண்டொன்றாய்நின்றாலொன்றொழிந்தொன்றையுன்ன
மற்றொருமனமுமுண்டோமறக்கலாம்வழிமற்றியாதோ
கற்றனர்ஞானமின்றேற்காமத்தைக்கடக்கலாமோ. (௮௪)

மயிலுடைச்சாபலாளைவஞ்சியாமுன்னர்நீண்ட
எயிலுடையிலங்கைநாதனிதயமாஞ்சிறையில்வைத்தான்
அயிலுடையரக்கனுள்ளமவ்வழிமெல்லமெல்ல
வெயிலுடைநாளிலுற்றவெண்ணெய்போல்வெதும்பிற்றன்றே. (௮௫)

விதியதுவலியினாலுமேலுளவிளைவினாலும்
பதியுறுகேடுவந்துகுறுகியபயத்தினாலும்
கதியுறுபொறியின்வெய்யகாமநோய்கல்விநோக்கா
மதியிலிமறையச்செய்ததீமைபோல்வளர்ந்ததன்றே. (௮௬)

பொன்மயமானநங்கைமனம்புகப்புன்மைபூண்ட
தன்மையோவரக்கன்றன்னையயர்த்ததோர்தகைமையாலோ
மன்மதன்வாளியாலிகலிவதோர்வலத்தனானான்
வன்மையையாற்றுமாற்றல்காமத்தேவதிந்ததன்றே. (௮௭)

எழுந்தனனிருக்கைநின்றண்டேழுலகத்துளோரும்
மொழிந்தனராசியோசைமுழங்கினசங்கமெங்கும்
பொழிந்தனபூவின்மாரிபோயினர்புறத்தோரெல்லாம்
அழிந்தழிசிந்தையோடுமாடகக்கோயில்புக்கான். (௮௮)

பூவினால்வேய்ந்துசெய்தபொங்குபோமளிகொங்கைத்
தேவிமார்குழுவுநீங்கச்சேர்ந்தனன்சேர்தலோடும்
நாவினாலொருநிகவ்விநயனமுங்குயமும்புக்குப்
பாவியாக்கொடுந்தவெம்மைபயப்பயப்பரந்ததன்றே.

(வேறு)

நூக்கலாகலாதகாதலூறுநூறுகோடியாப்
பூக்கவாசவாடைவீசுசீதநீர்பொதிந்தமென்
சேக்கைவீகரிந்துதிக்கபங்களட்டைவென்றதோள்
ஆக்கைதீயவுள்ளமையவாவிவேவதாயினான். (௯௦)

தாதுகொண்டசீதமேவுசந்துசந்தமென்றளிர்
போதுகொண்டவீத்தபோதுபொங்குதீமருந்தினால்
வேதுகொண்டதென்னமேனிவெந்துவெந்துவிம்முதீ
ஊதுவன்றுருத்திபோலுயிர்த்துயிர்த்தயங்கினான். (௧௧)

தாவியாதுதீதெறுத்துறைதையலாளைமெய்யுறப்
பாவியாதபோதிலாதபாவிமாழைபானல்வேல்
காவியானகண்ணிமேனிகாணலுறுமாசையால்
ஆவிசாலநொந்துநொந்தழுங்குவானுமாயினான். (௧௨)

பரங்கிடந்தமாதிரம்பரித்தபாழியானையின்
கரங்கிடந்தகொம்பொடுந்திரங்கவென்றகாவலன்
மரங்குடைந்ததும்பிபோலநங்கன்வாளிவந்துவந்
துரங்குடைந்துநொந்துநொந்துளைந்துளைந்தொதுங்கினான். (௧௩)

கொன்றைதுன்றுகோதையோடொர்கொம்புவந்தணைந்திடை
நின்றதுண்டுகண்டதென்றழிந்தழுங்குநீர்மையான்
மன்றறங்கலங்கன்மாரன்வாளிபோலமல்லிகைத்
தென்றல்வந்தெதிர்ந்தபோதுசீறுவானுமாயினான். (௧௪)

அன்னகாலையங்குநின்றெழுந்தழுங்குசிந்தையான்
இன்னவாறுசெய்வெனென்றெண்ணிலாவிரங்குவான்
பன்னுகோடிதீபமாலைபாலையாழ்பழித்தசொற்
பொன்னனாரெடுக்கவங்கொர்சோலைபூடுபோயினான். (௧௫)

(வேறு.)

மாணிக்கம்பனசம்வாழைமரகதம்வயிரந்தேமா
ஆணிப்பொன்வேங்கைகோங்கமரவிந்தராகம்பூகம்
சேணுய்க்குநீலஞ்சாலங்குருவிந்தந்தென்னம்வெள்ளி
பாணித்தென்பளிங்குநாகம்பாடலம்பவளமன்றே. (௧௬)

வானுறநிவந்தசெங்கேழ்மணிமரந்துவன்றிவான
மீனெனுமலர்கடம்மின்வேற்றுமைதெரிதறேற்ற
தேனுகுசோலைநாப்பட்செம்பொன்மண்டபத்துளாங்கோர்
பானிறவமளிசேர்ந்தான்பையுளுற்றயங்கினைவான். (௧௭)

கனிகளின்மலரின்வந்தகள்ளுண்டுகளிகளன்ன
வனிதையர்மழலையின்சொற்கிள்ளையுங்குயிலும்வண்டும்
இனியனமிழற்றுகின்றவியாவையுமிலங்கைவேந்தன்
முனியுமென்றவிந்தவாயமூங்கையின்போன்றவன்றே. (௧௮)

பருவத்தால்வாடைவந்தபசும்பனியநங்கபாணம்
உருவிப்புக்கொளித்தபுண்ணிற்குளித்தலுமுளைந்துவிம்மி
இருதுத்தான்யாதடாவென்றியம்பினனியம்பலோடும்
வெருவிப்போய்ச்சிசிரநீங்கிவேனில்வந்திறுத்ததன்றே. (௧௯)

வன்புணைவாரமுந்தீயமலைசாரலுங்குளிரவாழும்
மென்பனியெரித்ததென்றால்வேனலைவிளம்பலாமோ
அன்பெனும்விடமுண்டாரையாற்றலாமருந்துமுண்டோ
இன்பமுந்துன்பந்தானுமுள்ளத்தேதோழியைந்தவன்றே. (௧௦௦)

மாதிரத்திறுதிகாறுந்தன்மனத்தெழுந்தமையல்
வேதனைவெப்பஞ்செய்யானைலும்வெதுப்புங்காலை
யாதினிங்கிதனின்முன்னைச்சிசிரநன்றிதனைநீக்கிக்
கூதிராம்பருவந்தன்னைக்கொணருதிர்விரைவினென்றான். (௧௦௧)

கூதிர்வந்தடைந்தகாலைகொதித்தனகுவவுத்திண்டோள்
சீதமுஞ்சுடுமோமுன்னைச்சிசிரமேமகாணிதென்றான்
ஆதியாயஞ்சுமன்றேயருளலதியற்றவென்ன
யாதுமிங்கிருந்தவாகாதியாவையுமகற்றுமென்றான். (௧௦௨)

என்னலுமிருதுவெல்லாமேகினயாவுந்தத்தம்
பன்னரும்பருவஞ்செய்யாபோகிபோற்பயற்றுநீத்த
பின்னருமுலகமெல்லாம்பிணிமுதற்பாசம்வீசித்
துன்னருந்தவத்தினெய்துந்துறக்கம்போற்றோன்றிற்றன்றே. (௧௦௩

கூலத்தாருலகமெல்லாங்குளிர்ப்பொடுவெதுப்புநீங்க
நீலத்தாரரக்கன்மேனிநெய்யின்றியெரிந்ததன்றே
காலத்தால்வருவதொன்றோகாமத்தாற்கனலும்வெந்தீச்
சீலத்தாலவிவதன்றிச்செய்யத்தானுவதுண்டோ. (௧௦௪)

நாரமுண்டெழுந்தமேகந்தாமரைவளையநாறு
சாரமுண்டிருந்தசீதசந்தனத்தளிர்மென்றாதோ
டாரமுண்டிருந்தஞ்சிந்தையயர்கின்றானயனின்றானை
ஈரமுண்டென்பதோடியிந்துவைக்கொணர்மினென்றான். (௧௦௫)

வெஞ்சினத்தரக்கனண்டவியனகர்மீதுபோதும்
நெஞ்சிலனைதுங்குகின்றநிறைமதியோனைநோக்கி
அஞ்சலைவருதிநின்னையழைத்தனனரசனென்னச்
சஞ்சலந்துறந்துதானைச்சந்திரனுதிக்கலுற்றான். (௧௦௬)

அயிருறக்கலந்தநன்னீராழிநின்றாழிநீத்துச்
செயிருறக்கலந்ததாண்டோர்தெய்வுவந்துற்றபோது
வயிரமுற்றுடைந்துசென்றோர்வலியவற்செல்லுமாபோல்
உயிர்தெறக்காலனென்பானொத்தனனுதயஞ்செய்தான். (௧௦௭)

பராவருகதிர்களெங்கும்பரப்பிமீப்படர்ந்துவானில்
தராதலத்தெவரும்பேணுவவனையேசலிக்குநீரால்
அராவணைதுயிலுமண்ணல்காலனோர்ந்தற்றநோக்கி
இராவணனுயிர்மேவய்க்கவிகிரியமென்னலானான்.

அருகுறுபாலின்வேலையமுதெலாமளைந்துவாரிப்
பருகினன்பரந்துபாய்ந்தநிலாச்சுடர்ப்பனிமென்கற்றை
நெரியுறுபுருவச்செங்கணரக்கற்குநெருப்பினுப்பண்
உருகியவெள்ளியள்ளிவீசினாலொத்ததன்றே. (௧௦௯)

மின்னிலந்திரிந்ததன்னவிழுநிலாமிதிலைசூழ்ந்த
சென்னலங்கழனிநாடன்றிருமகள்செவ்விகோளா
நன்னலந்தொலைந்துசோருமரக்கனைநாளுந்தோலாத்
துன்னலனொருவன்பெற்றபுகழெனச்சுட்டதன்றே. (௧௧௦)

கருங்கழற்காலனஞ்சுங்காவலன்கருத்துநோக்கித்
தருங்கதிர்ச்சீதயாக்கைச்சந்திரற்றருதியொன்ன
முருங்கியதணலின்மூரிவிடத்தினைமுகக்குஞ்சீற்றத்
திருங்கதிரருக்கன்றன்னையாரழைத்தீர்கொன்றான். (௧௧௧)

அவ்வழிச்சிலதரஞ்சியாதியாயருளில்லாரா
இவ்வழித்தருதுமென்புதியம்பலாமியல்பிற்றன்றால்
செவ்வழிக்கதிரோனென்றுந்தேரின்மேலன்றிவாரான்
வெவ்வழித்தெனினுந்திங்கள்விமானத்தின்மேலதென்றார். (௧௧௨)

(வேறு.)

பணைந்தாழல்குற்பனிமொழியார்க்கன்புபட்டார்படுங்காமக்
குணந்தான்முன்னமறியாதான்கொதியாநின்றான்மதியாலே
தணந்தாமரையின்றனிப்பகைஞனென்னுந்தன்மையொருதானே
உணர்ந்தானுணர்வுற்றவன்மேலிட்டுயிர்தந்துய்க்கவுரைசெய்வான். (௧௧௩)

தேயாநின்றாய்மெய்வெளுத்தாயுள்ளங்கறுத்தாய்நிலைதிரிந்தா
காயாநின்றாயொருநீயுங்கண்டார்சொல்லக்கேட்டாயோ
பாயாநின்றமலர்வாளிபறியாநின்றாரின்மையால்
ஓயாநின்றேனுயிர்காத்தற்குரியார்யாவருமிலையே. (௧௧௪)

ஆற்றாராகிற்றம்மைக்கொண்டடங்காரோவென்றொருயிர்க்குக்
கூற்றாய்நின்றகுலச்சனகிருவனைமலர்ந்ததாமரைக்குத்
தோற்றாயதனைசங்சரிந்தாய்மெலிந்தாய்வெதும்பத்தொடங்கினாய்
மாற்றார்செல்வங்கண்டழிந்தால்வெற்றியாகவற்றாமோ. (௧௧௫)

என்னப்பன்னியிடருழவாரவோடிவனைக்கொண்டசற்றி
முன்னைப்பகலும்பகலோனும்வருகவென்றன்மொழியாமுன்
உன்னற்கரியவுபெதியுமிரவுமொழிந்தவொருநொடியில்
பன்னற்கரியபகலவனும்பகலும்வந்துபரந்தவால். (௧௧௬)

இருக்கின்மொழியாரொரிமுகத்தினீந்தநெய்யினவிர்செம்பொன்
உருக்கியனையகதிர்பாயவனல்போல்விரிந்ததுயர்கமலம்
அருக்கனெய்தவமைந்தடங்கிவாழாவடாதபொருளெய்திச்
செருக்கியிடையேதிருவிழந்தசிறியோர்போன்றசேதாம்பல். (௧௧௭)

நாணிநின்றவொளிமழுங்கிநெடுங்காநின்றவுடம்பினனைச்
சேணினின்றுபுறஞ்சாய்ந்துசுங்குற்றூரம்பின்செல்லப்
பூணின்வெய்யோனொருதிசையேபுகுதப்போவானீர்புகழ்வேந்தர்
ஆணைசெல்லநிலையழிந்தவரசர்போன்றனல்லாண்டான். (௧௧௮)

(வேறு.)

மணந்தபேரன்பனைமலரின்சேக்கையுள்
புணர்ந்தவரிடையொருவெகுளிபொங்கலால்
கணங்குழைமகளிர்கள்கங்குனீங்கிட
உணர்ந்திலர்கனவினுமூடறீர்ந்திலர். (௧௧௯)

தள்ளருமுயிரினர்தலைவர்நீங்கலால்
நள்ளிரவிடையுறநடுக்கநீங்கலர்
கொள்ளையினலர்தருதுவலைநாண்மலர்
கள்ளருவனவெனக்கலுழுங்கண்ணினார். (௧௨௦)

அணைமலர்ச்சேக்கையுளாடறீர்ந்தனர்
பணைகளைத்தழுவியபவளவல்லிபோல்
இணைமலர்க்கைகளினிறுகவின்னுயிர்த்
துணைவரைத்தழுவினர்துயில்கின்றார்சிலர். (௧௨௧)

அளியினங்கடற்றொறுமார்ப்பவாய்கதிர்
ஒளிபடவுணர்ந்திலவுறங்குகின்றன
தெளிவிலவின்றுயில்விளையுஞ்சேக்கையுள்
களிநலங்கிளர்த்தனகளிநல்யானையே. (௧௨௨)

விரிந்துறைதுறைதொறும்விளக்கம்யாவையும்
எரிந்தெழுதூங்கலவொளியிழந்தன
அருந்துறைநிரம்பியவுயிரினன்பனைப்
பிரிந்துறைதருந்தலைப்பேதைமாரினே. (௧௨௩)

புணர்ந்திருமுரிஞ்சுறுபொழுதுபுல்லியும்
வணர்ந்திலவைகறைமலருமாமலர்
நனைந்தலையமளியிற்றுயிலுநங்கைமார்
அனந்தரினெடுங்கணோடொத்தவாமரோ. (௧௨௪)

இச்சையிற்றுயில்வதற்கியாவர்கண்களும்
நிச்சயம்பகலுந்தமிமைகணீக்கலர்
பிச்சையுமிடுதுமென்றுணர்வுபேணலர்
வச்சையர்நெடுமனைவாயிலானவே. (௧௨௫)

நஞ்சுறுபிரிவினைநாளினீளமோர்
தஞ்சுறவிடுவேந்தர்தயாவுதாங்கலால்
வெஞ்சிறைநீங்கியவிளையினானென
நெஞ்சுறக்களித்தனநேமிப்புள்ளெலாம். (௧௨௬)

நான்மதிக்கல்லநுடுவணெய்திய
ஆனையினீக்கலாவலரிற்பாய்வன
மானவிலேடயன்படாமொந்தர்வாயில்சேர்
பாணரிற்றளர்ச்சனபாடற்றும்பியே. (கஉஎ)

அருமணிச்சாளாமதனினூடுபக்
கெரிகதிரின்றுயிலெழூபபியேபறவும்
மருளொடுசெருளாறுநிலையர்மங்கையர்
தெருளுறமெய்ப்பொருடெளிந்திலாரினே. (கஉஅ)

வலின்வன்மையைபெண்ணைறெற்றலா
நாவலரியற்றியநாளினூறறால்
காவலினினைனர்கல பாக்கமும்
கூவுறுகோழியுங்குயில்வுசொணடவே. (கஉகூ)

இனையனவுலகினிநிகழுமெல்லையில்
கனைகழலரக்கனுயகண்ணிருக்கிருை
நினைவுறுமனத்தையுநெருபபிர்றிக்கமால்
அனையவசதிங்களாயாகுமாலென்றுள. (கநo)

திங்களோவன்றிதுசெல்வசெங்கதிர்
பொங்குளைப்பச்சையம்புரவித்தோதால்
வெங்கதிர்சுடுவதேயன்றிமெய்யுறத்
தங்குதண்கதிர்சுடத்தகாதென்றுசிலா. (கநக)

(வேறு)

நீலச்சிகரக்கிரியன்னவன்னற்றவெய்யடோ
ஆலத்தனும்வெய்யனைகற்றியராற்றகிளற
வேலைக்குரலைததவிர்கென்றுவிலக்கிமேலை
மாலைப்பிறைப்பிள்ளையைக்கூவுதிர்வல்லையென்றுன். (கநஉ)

சொன்னுனிருதர்க்கிறையம்மொழிசொல்லலோடும்
அ[illegible]னிரம்பியவம்பதியாணைமடாவேலை
மூன்றாளினிளம்பிறையாகிமுளைத்ததென்றுல்
எந்நாளுமருந்தவமன்றியியற்றலாமோ. (கநந)

குடபாலின்முளைத்ததுகண்டனுணங்கடியோன்
வடவாவனலன்றெனின்மண்பிடர்வைத்தபாம்பின்
விடவாளெயிறன்றெனினென்னைவெகுண்டமாலை
அடவாளுருவிக்கொடுதோன்றியதாகுமன்றே. (கநச)

[illegible]சடிலத்தலைவைத்ததுதண்டரங்கம்
[illegible]துங்கடலிறகுடைமுத்துபிறந்தபோதே
[illegible]வைத்தன்பிடற்றிறெளித்ததக்கோ[illegible]
[illegible]மெனவெண்ணியவெண்ணமன்றே. (கநரு)

உருமொக்கவுலைந்துயிர்றூங்கியதிங்களோடித்
திருமிச்சிறுமின்பிறைதீமைகுறைந்ததில்லை
கருமைக்கறைநெஞ்சினினஞ்சுகலந்தபாம்பின்
பெருமைச்சிறுமைக்கொருபெற்றிகுறைந்ததுண்டோ. (கஙசு)

கன்னக்கனியுமிருடன்னையுங்காலன்மென்றே
முன்னைக்கதிரன்றிதகற்றுதிர்முன்புசான்ற
என்னைச்சுடுமென்னினிவ்வேமுலகத்துவாழ்வோர்
பின்னைச்சிலருய்வதொன்றங்கொருபேச்சுமுண்டோ. (கஙஎ)

ஆண்டப்பிறைநீங்கலுமெய்தியநஞ்சகாரம்
தீண்டற்கெளிதாய்ப்பலதேய்ப்பனதேய்க்கலாகி
வேண்டிற்கரபத்திரத்தீர்த்துவிழுந்தலாகிக்
காண்டற்கினிதாய்ப்பல்கந்துதிரட்டலாகி. (கஙஅ)

முருடூர்த்துருட்டற்கெளிதென்பதென்முழுமுற்றிப்
பொருடங்கில்கேள்விச்சுடர்புக்குவழங்கலின்றிக்
குருடங்கிதென்னக்குறிக்கொண்டுகண்ணொட்டக்குன்றி
அருடூர்ந்தநெஞ்சிற்கரிதென்பதுவந்தகாரம். (கஙகூ)

விள்ளாதுசெறிந்திடைமேலுறவோங்கியெங்கும்
தள்ளாதிருளாந்தகன்ஞாலம்விழுங்கலோடும்
எள்ளாவுலகியாவையும்யாவரும்வீயுமென்ப
துள்ளாவமிழ்ந்தான்விடமுண்டவொருத்தனென்றான். (கசo)

வேலைத்தலையந்தொருவன்வலிபால்விழுங்கும்
ஆலத்திடைக்குவதன்றிதறிந்துணர்ந்தேன்
ஞாலத்தொடுவிண்முதல்யாவையுநாவினக்கும்
காலக்கனல்கார்விடமுண்டுகெறுத்ததன்றே. (கசக)

அம்பும்பனலுறுமழைபாக்கனவந்தகாரத்
தும்பர்மழைகொண்டயலொப்பரிதாயதப்பின்
கொம்பர்குரும்பைக்குலங்கொண்டதுதிங்கடாங்கி
வெம்புந்தமியேன்முன்விளக்கெனத்தோன்றுமன்றே. (கசஉ)

மருளூடுவந்தயக்கோமதிமற்றுமுண்டோ
தெருளாதிதென்றேறிணிமையிழைத்தாலுமொவ்வா
இருளூடிருகுண்டலங்கொண்டிருண்டநீலச்
சுருளோடும்வந்தோர்சுடர்மாமதிதோன்றுமன்றே. (கசங)

புடைகொண்டெழுகொங்கையுமல்குலும்புல்கிநிற்கும்
இடைகண்டிலமல்லதெல்லாவுருவுந்தெரிந்தாம்
விடநுங்கியகண்ணுடையாரிவர்மெல்லமெல்ல
மடமங்கையராயென்மனத்தவராயினரோ.

பண்டேயுலகேழினுமுள்ளபடைக்கணாரைக்
கண்டேனிவர்போல்வதோர்பெண்ணுருக்கண்டிலேனால்
உண்டேயெனின்வேறினியெங்கையுணர்த்திநின்ற
வண்டேறுகோதைமடவாரிவராகுமன்றே. (கசரு)

பூண்டிப்பிணியானுறுகின்றதுதான்பொறாதாள்
தேண்டிக்கொடுவந்தனள்செய்வதோர்மாறுமுண்டோ
காண்டற்கினியாளொருக்கண்டவட்கேட்குமாற்றால்
ஈண்டிப்பொழுதேவிரைந்தெங்கையைக்கூவுகென்றான். (கசசு)

என்றானனலுங்கடிதேகினர்கூவுமெல்லை
வன்றாணிருதக்குலம்வேரறமாய்த்தல்செய்வாள்
ஒன்றாதகாமக்கனலுட்டெறலோடுநாசி
பொன்றாழ்குழைதன்னொடும்போக்கினள்போய்ப்புகுந்தாள். (கசஎ)

பொய்ந்நின்றநெஞ்சிற்கொடியாள்புகுந்தாளைநோக்கி
நெய்ந்நின்றகூர்வாளிவனேருறநோக்குநங்காய்
மைந்நின்றவாட்கண்மயிலின்றெனவந்தென்முன்னர்
இந்நின்றவளாங்கொலியம்பியசீதையென்றான். (கசஅ)

செந்தாமரைக்கண்ணொடுஞ்செங்கனிவாயினோடும்
சந்தார்தடந்தோளொடுந்தாழ்தடக்கைகளோடும்
அந்தாரகலத்தொடுமஞ்சனக்குன்றமென்ன
வந்தானிவனாகுமவ்வல்வில்லிராமனென்றாள். (கசகூ)

பெண்பாலுநானிதுகண்டதுபேதைக்கீண
டெண்பாலுமிலாததொராணுருவென்றியென்னே
கண்பாலுறுமாயைகவற்றுதல்கற்றநம்மை
மண்பாலவரோகொல்விளைப்பவர்மாயையென்றான். (கருo)

ஊன்றுமுணர்வப்புறமொன்றினுமோடலின்றி
ஆன்றுமுளதாநெடிதாசைகளற்றநின்றாய்க்
கேன்றனெறியோவிழிநோக்குமிடங்கடோறும்
தோன்றுமனையாளிதுதொன்னெறித்தாகுமென்றாள். (கருக)

அன்னாளதுகூறவரக்கனுமன்னதாக
இன்னாலவ்விராமனைக்காண்குறுநீரொன்னென்றான்
எந்நாளவனென்னையித்தீர்வருமின்னல்செய்தான்
அந்நாண்முதல்யானுயிர்த்திலனாகுமென்றாள். (கருஉ)

ஆமாமதடுக்குமெனக்கையொடாவிநைய
வேமால்வினையேற்கினியென்விடிவாகுமென்னக்
கோமானுலகுக்கொருநீகுறைநின்றதென்னே
[illegible]மலாடனைவவ்வதிபோதியென்றாள். (கருங)

என்றுளகன்றுளவரக்கனுமீட்டிநின்றான்
ஒன்றுணுமுணாந்திலனுயிர்த்துசோர்ந்தான்
நின்றுருகிங்கினா நினைவுளநாளிலே
பொன்றுதுளனுயினனதந்தைபோலுமன்றே. (கருச)

இறந்தாபிறந்தாரெனவின்னுயிர்பெற்றமன்னன்
மறந்தானுணாந்தானவண்மாருதிதன்றுரைநோக்கிக்
கறந்தாலெனநீர்பொருசந்திரகாந்தத்தாலே
சிறந்தாமணிமண்டபஞ்செய்கெனச்செப்புகென்றுன. (கருரு)

வந்தானெடுவானுறைதச்சனமனத்துணாந்தான்
சிந்தாவினையன்றியுஞ்செய்வினையானுஞ்செயதான்
அந்தாமநெடுந்தரியாபிரகுதாலமைத்த
சந்தார்மணிமண்டபந்தானமையாவருநாண. (கருசு)

காந்தமமுகிறனளிகாலவனகாலமீனின
வேந்தமுளிப றியமேலெலாங்கெழிவிரிகான
பூந்தென்றலைபெருந்தண்டைறசாளரமும்புனைந்தான்
எந்துமணிக்கறபகச்சீதனக்காவினமுதுரான. (கருஎ)

ஆணிநாவமபோன்மைகமணிச்சுடர்விளக்கம்
சேணுறநிரைபயசெதயவமடந்தைமாரகள
பூணிறபொலியாடுடையோதிடபபொஙகுதோளான்
மாணிக்கமானதநிலைமண்டபநகாணவநதான. (கருஅ)

அல்லாயிரசோடியடுக்கியதாரதுதேனும்
நலலாமுகமாநனிரவாணிலவிலதாமப
பல்லாயிரகோடிபணிச்சுடரீனறதிங்கள்
எல்லாமுடனுயிருளோடியிரிந்தனறே. (கருகூ)

பொற்புற்றனமாமணியொனபரம்பூவினின்ற
கறபத்தருவினககாநணிழற்கறைநகரற
றபற்றழியபபகலாகியதாலருக்கன
நிப்பத்தெளிகினறதுநீளசுடாமேனமையனறே. (கசுo)

ஊறுசைமுதறபொறியாவையுமொனறிஞெனறு
தேறுநிலையுற்றதொசிந்தையனசெய்கையோரான்
வேறுயபிறபபிடைவேட்கைவிசித்துநீபப
மாறுருடனுறறெனமண்டபம்வந்துபுக்கான. (கசுக)

(வேறு.)

தண்டலிறவஞ்செய்வோர்தாம்வேண்டியதரவேகல்கும்
மண்டலமகரவேலையமுதொடும்வந்ததென்னப்
பண்டருசுரும்புசேரும்பசுமரமுயிர்த்தபைம்பொற்
றண்டளிர்மலரிற்செய்கசிகனக்கேக்கைகார்க்கன்

நேரிழைமகளிர்கூந்தனின்றநறைவாசநீந்தி
வேரியஞ்சாளச்சோலைவேனிலான்விருந்துசெய்ய
ஆர்கலியழுவந்தந்தமருந்தெனவொருவராவி
தீரினுமுதவற்கொத்ததென்றல்வந்திறுத்ததன்றே. (௧௬௩)

சாளரத்தூடுவந்துதவழ்தலுந்தரித்ததேற்றானை
நீளரத்தங்கள்சிந்திநெருப்புகநோக்குநீரான்
வாழ்மனைபுகுந்ததாண்டோர்மாசுணம்வரக்கண்டனன
கோளுறக்கொதித்துவிம்மியுழையனைக்கூவிச்சொன்னான. (௧௬௪)

கூவினுயிர்த்தசின்னீருலகினைக்குப்புறனென்னத்
தேவரிலொருவனென்னையின்னலுஞ்செய்யத்தக்கான
ஏவலினன்றிவந்திங்கிவ்வழியெய்திறனென்னாக்
காவலினுழையாதம்மைக்கொணருதிகடிதினென்றான. (௧௬௫)

அவ்வழியுழையரோடியாண்டவர்கொணர்தலோடும்
வெவ்வழியமைந்தசெங்கண்வெருவுறநோக்கிவெய்யோன
செவ்வழிதென்றலோற்குத்திருத்தினைநீகொலென்ன
இவ்வழியிருந்தகாலைத்தடையவரில்லையென்றார். (௧௬௬)

காற்றினேன்றனைவாளாமுனிதலிற்கண்டதிலை
கூற்றுவன்றனையினைக்குறாதமாறகுறித்தவாற்றல்
வேற்றருங்கருங்கட்சீதைசெய்யருள்புனையேனென்றல
ஆற்றலாலடுத்ததென்னுமமைச்சரைக்கொணாதியென்றான. (௧௬௭)

ஏவினசிலத்தரோடியேயனுந்தலையினெங்கும
கூவினர்கூவலோடுங்குறுகினர்கொடிச்சிண்டோர
மாவினர்சிவிகைமேலார்மும்மதகளிற்றாரவையத்த
தேவரும்வானந்தனினறேவருஞ்சிந்தைசிந்த. (௧௬௮)

வந்தமந்திரியரோடுமாசறமனத்தினெண்ணிச்
சிந்தையினினைந்தசெயயுஞ்செய்கையனறெளிவிலனெஞ்சன
அந்தரஞ்செல்வதாண்டோர்விமானத்திலாருமின்றி
இந்தியமடக்கினினறமாரீசனிருக்கைசேர்ந்தான. (௧௬௯)

இருந்தமாரீசனத்தவிராவணனெய்தலோடும்
பொருந்தியபயத்தன்சிந்தைபொருமுற்றுவெருவுகின்றான
கருத்தடமலையன்னானையெதிர்கொணடுகடன்கள்யாவும்
திருந்தியசெய்துசெவ்வித்திருமுகநோக்கிச்செப்பு (௧௭௦)

(வேறு.)

ந்தமலர்த்தண்கற்பகநீழற்றலைவற்கும
ந்தகனுக்குமஞ்சவடுக்குமரசாள்வாய்
ந்தவனத்தேனின்னலிருக்கைக்கெளியோரின
ருத்தென்சொல்லுதியென்றான்மருள்கின்றான். (௧௭௧)

ஆனதனைத்துமாவிதரித்தேனயர்கின்றேன்
போனதுபொற்பும்மேன்மையுமற்றென்புகழோடும்
யானதுனக்கின்றெங்ஙனுரைக்கேனினிதென்று
வானவருக்குநாணதடுக்கும்வசைமன்றோ. (கஎஉ)

வன்மைதரித்தோர்மானுடர்மற்றங்கவர்வாளால்
நின்மருகிக்குநாசிபிழக்குநிலைநேர்ந்தார்
என்மரபுக்குநின்மரபுக்குமிதன்மேலோர்
புன்மைதெரிப்பின்வேறினியெற்றேபுகல்வேலோய். (கஎங)

திருகுசினத்தார்முதிரமலைந்தார்சிறியோர்நாள்
பருகினரொன்றால்வென்றநலத்தின்பழியன்றோ
இருகைசுமந்தாயினிதினிருந்தாயிகல்வேலுன்
மருகருலந்தாரொருவன்மலைந்தான்வரிவில்லால். (கஎச)

வெப்பழியாதென்னெஞ்சுமுலந்தேன்விளிகின்றேன்
ஒப்பழிவென்றேபோர்செயலொல்லேனுடன்வாழும்
துப்பழிசெவ்வாய்வஞ்சியைவவ்வத்துணைகொண்டிட்
டிப்பழிநின்னாற்றீரியவந்தேனிவணென்றான். (கஎரு)

இச்சொலனைத்துஞ்சொல்லியரக்கனெரிகின்ற
கிச்சினுருக்கிட்டெய்த்தனனென்னக்கிளராமுன்
சிச்சியெனத்தன்மெய்ச்செவிபொத்தித்தெருமந்தான்
அச்சமகற்றிச்செற்றமனத்தோடறைகின்றான். (கஎசு)

மன்னாநீநின்வாழ்வைமுடித்தாய்மதியற்றாய்
உன்னானன்றீதூழ்வினையென்றேயுணர்கின்றேன்
இன்னாநெஞ்சனேனுமுரைப்பலிதமென்னுஞ்
சொன்னானன்றேயன்னவனுக்குத்துணிவெல்லாம். (கஎஎ)

அற்றகரத்தோடன்றலைதீயேயனன்முன்றில்
பற்றினையுய்த்தாய்பற்பலகாலம்பசிகூர
உற்றுயிருள்ளேதேயவுலந்தாயுழையன்றோ
பெற்றனைசெல்வம்பின்னதிகழ்ந்தார்பெறலாமோ (கஎஅ)

திறத்திறனாலோசெய்தவமுற்றித்திருவுற்றாய்
மறத்திறனாலோசொல்லுதிசொல்லாய்மறைவல்லோய்
அறத்திறனாலேயெய்தினையன்றேவதுநீயும்
புறத்திறனாலேபின்னுமிழக்கப்புகுவாயோ. (கஎகூ)

நாரங்கொண்டார்நாடுகவர்ந்தார்நடையல்லா
வாரங்கொண்டார்மற்றொருவர்க்காய்மனைவாழும்
தாரங்கொண்டாரென்றிவர்தம்மைத்தருமந்தான்
ஏருங்கண்டாய்கண்டகருயர்ந்தாரெவரையா.

அந்தாமுற்றான்கலைக்குப்பொற்பாலழிவுற்றான்
இந்திரனைப்பாரொத்தனையோர்தாமிழிவுற்றார்
செந்திருவொப்பாரொத்தனையோர்நின்றிருவுண்பார
மந்திரமற்றாருற்றதுரைத்தாய்மதியற்றாய. (௧௮௧)

செய்தாயேனுந்தீவினையோடும்பழியல்லால
எய்தாதெய்தாதெய்தினிராமனுலகின்றன •
வைதாலன்னவாளிகள்கொண்டுன்வழியோடும்
கொய்தானன்றேகொற்றமுடித்துணைருபுவெல்லாம. (௧௮௨)

என்றாலென்னேயெண்ணலையேநீகரனென்பான்
நின்றானைக்குமேலுளனென்னுநிலையிட்டா
தன்றானைக்குற்றாரொடுமாளத்தனுமொன்றால்
கொன்றான்முற்றுங்கொல்லமனத்திறகுறிக்கொண்டான. (௧௮௩)

வெய்யோர்யாரோவீரவிராதன்றுணைவெய்யோர
ஐயோபோனானம்பொடுமும்பர்க்கவனென்றால்
உய்வார்யாரேநமயினைக்கொண்டொருதாலும்
கையாநின்றேனீயிதுரைத்துநலிவாயோ (௧௮௪)

மாண்டார்மாண்டார்நீயினிமாள்வாதொழில்செய்ய
வேண்டாவேண்டாசெய்கெனினுய்வானவிதியுண்டோ
ஆண்டாராண்டாரொத்தனையென்கோவறனோரார்
ஈண்டாரீண்டார்நின்றவரொல்லாமிலரன்றே. (௧௮௫)

எம்பிக்குமென்னன்னைதனக்குமிறுதிக்கோர
அம்புய்க்கும்போர்வில்லிதனக்குமயனிற்கும்
தும்பிக்குநம்மாண்மைதவிர்ந்தேசயனிற்கும்
கம்பிக்குமென்னெஞ்சவனெவுறேகவல்கின்றேன். (௧௮௬)

நின்றுஞ்சென்றும்வாழ்வனயாவுநிலையாவால்
பொன்றும்மென்றும்மெய்ம்மையுணர்ந்தாம்புலையாடற
கொன்றும்முன்னுயெனனுரைகொள்ளாயுயர்செல்வத்
தென்றும்மென்றும்வைகுதியூயாவினியென்றான். (௧௮௭)

(வேறு.)

கங்கைசடைவைத்தவனொருங்கைலைவெற்போர
அங்கையினெடுத்தவனதாடெழின்மணித்தோள்
இங்கொர்மனிதற்கெளியவென்றனையெனத்தன்
வெங்கணெரியப்புருவமீதுறவிடைத்தான். (௧௮௮)

நிகழ்ந்ததைநினைத்திலையெனெஞ்சினிலையஞ்சா
நிகழ்ந்தனையெனக்கிளையநங்கைமுகமெங்கும்
[illegible]ழ்க்தனையுதொப்புநம்மைத்தலைமையையா
[illegible]தனிதனிப்பிழைபொறுத்தனைநிதென்றான். (௧௮௯)

தன்னைமுனிவுற்றதாடகைகட்டவில்லோனைப்
பின்னைமுனிவுற்றிடுமெனத்தவிர்தல்பேணாய்
உன்னைமுனிவுற்றனைகுலத்தைமுனிவுற்றாய்
என்னைமுனிவுற்றிலையிதென்னெனவிசைத்தான். (௧௧௦)

எடுத்தமலையேநினையினீசனிசைவில்லாய்
வடித்தமலையேயிதுவலித்திடெனவாரிப
பிடித்தமலைநாணிடைபிடித்தொருவன்மேனாள்
ஒடித்தமலையும்பர்முகடுற்றமலையன்றோ. (௧௧௧)

யாதுமறியாயுரைசெயாய்சுகவிராமன்
கோதைபுனையாமுழுவுயிர்கொள்ளைபடுமன்றே
பேதைமதியாலஃதொர்பெண்ணுருவமென்றாய்
சீதையுருவோவரிதுதீவினையதன்றோ (௧௧௨)

உஞ்சுபிழையாயுறவிதேறுமெனவுன்னா
நெஞ்சுபதைபோகுமதுநீநினையகில்லாய்
அஞ்சுமெனதாருயிரறிந்தருகுநின்றார்
நஞ்சுநுகராரொருவராயினென்றெனலுநன்றோ. (௧௧௩)

நாசமுதன்மற்றுமிழையாருலகுமற்றைத்
தேசமுதன்முற்றுமொழிமைப்பினுயிர்தின்ப
கோசிகனமைத்ததகடவுட்படைகொதிப்போ
டாசிலகணிப்பிலவிராமனருணிற்ப. (௧௧௪)

வேதனைசெய்காமவிடமேலிடமெலிந்தாய்
தீதுநினைசெய்தாயினையசெய்கைசிதைவன்றோ
மாதுலனுமாய்மரபினமுறைமையுறவந்தேன்
ஆதுநினைசெய்தேனதனையெந்தைதவிர்கென்றான். (௧௧௫)

என்னவுரையத்தனையுமெத்தனையுமெண்ணச்
சொன்னவனையேசினவரக்கர்பதிசொன்னான்
அன்னையுயிர்செற்றவனையஞ்சியுறைகின்றாய்
உன்னையொருவற்கொருவனென்றுணர்கைநன்றோ. (௧௧௬)

திக்கயமொளிப்பநிலைதேவர்கெடவானம்
புக்கவரிருக்கைபுகைவித்துலகம்யாவும்
சக்கரநடத்துமெனையோதயரதன்றன்
மக்கண்வலிசிற்பரிதுநன்றுவலியன்றோ. (௧௧௭)

மூவுலகினுக்குமொருநாயகமுடித்தேன்
மேவலர்கிடைக்கினிதன்மேலினியதுண்டோ
ஏவல்செயுதிற்றியெனதாணைவழியெண்ணிக்
காவல்செயமைச்சர்கடனீகடவதுண்டோ. (௧௧௮)

மறுத்தனையெனப்பெறினுநின்னைவடிவாளால்
ஒறுத்துமனமுற்றதமுடிப்பதொழிகல்லேன்
வெறுப்பனகிளத்தலுறுமித்தொழிலைவிட்டென்
குறிப்பின்வழிநிற்றியுயிர்கொண்டுழலியென்றான். (க௯௯)

(வேறு.)

அரக்கனஃதுரைத்தலோடுமறிந்தனனடங்கிநெஞ்சம்
தருக்கினாற்கெடுவரன்றேதத்துவநிலையிற்றீர்ந்தோர்
செருக்கினிற்றீர்ந்தமேலோர்பார்தமயினுஞ்செருக்கமொன்று
உருக்கியசெம்பினுந்தீயொனவுரைக்கலுற்றான். (உ00)

உன்வயினுறுதிநோக்கியுண்மையினுணர்த்தினேன்மற்
றென்வயினுறுதிநோக்கியச்சத்தாலிசைத்தேனல்லேன்
நன்மையுந்தீமையுநன்றோராசவந்துறுபோது
புன்மையினுற்றநீராயசெய்வதுபுகறியென்றான். (உ0க)

என்றலுமெழுந்தபுலவியேறியவெகுளிநீங்கிக்
குன்றெனக்குவிந்ததோளாய்மாரவேள்கொதிக்குமம்பால்
பொன்றலினிராமனம்பாற்பொன்றலேபுகழுண்டன்றோ
தென்றலைப்பகையைச்செய்தசீதையைத்தருதியென்றான். (உ0உ)

ஆண்டையானனையகூறவரக்கரோரிருவரோடும்
பூண்டவென்மானந்தீரத்தவனமபுக்கபோழ்தில்
தூண்டியசரங்கள்பாயத்துணைவர்பட்டுருளவஞ்சி
மீண்டயான்சென்றுசெய்யமவினையெனசொல்லெமபுகென்றான. (உ0௩)

ஆயதாங்கனையகூறவக்காரிகாளையநாயகனை
தாயையாருயிருண்டானைபாலசொலச்சமைந்தினமேனை
போயையாபுணர்ப்பதெனனேனையெப்பறுபொருந்துற்றனன்றோ
மாயையால்வஞ்சித்தன்றேவவ்வுதலவனையென்றான. (உ0௪)

பிறத்தினியுரைப்பதென்னேபுரவலனேவிதனைத்
திறத்துழியன்றிவஞ்சித்தெய்துதல்சிறுமைத்தாகும்
அறத்துளதொக்குமன்றேயமாததலைவெனறுகொண்டுன
மறத்துறைவளர்த்திமன்னவெனமாரீசனசொன்னான். (உ0௫)

ஆனவனுரைக்கநக்கவரக்கர்கோனவனைவெல்லத்
தானையும்வேண்டுமோவெனநடக்கலைவாடக்கதன்றோ
ஏனையிறக்கிறருனுந்தமியளாயிறக்குமன்றே
மானவளாதலாலேமாயையின்வலித்துமென்றான். (உ0௬)

தேவியைத்தீண்டாமுன்னமிவன்றலைசரத்திற்சிந்திப்
போமவகைபுணர்ப்பினென்றுபுந்தியாற்புகல்கின்றேற்கும்
ஆம்வகையாயிற்றில்லையார்விதிவிளைவையோர்வார்
[illegible]செய்வதல்லாலில்லைவேறொன்றென்றெண்ணா. (உ0எ)

என்னமாமாயம்யான்மற்றியற்றுவதியம்புகென்றான்
பொன்னின்மானாகிப்புக்குப்பொன்னைமால்புணர்த்துகென்ன
அன்னதுசெய்வெனென்னாமாரீசனமைந்துபோனான்
மின்னும்வேலரக்கர்கோனும்வேறொருநெறியிற்போனான். (உ0அ)

(வேறு.)

மேனாளவன்வில்வலிகண்டமையால்
தானாகவமைந்துசமைந்திலனால்
மானாகுதியென்றவன்வாய்மொழியால்
போனான்மனமுஞ்செயலும்புகல்வாம். (உ0௯)

வெஞ்சுற்றநினைந்துகும்பீரனாவே
றஞ்சுற்றுமறக்குறுமாழ்குழிநீர்
நஞ்சுற்றுறுமீனினடுக்குறுமால்
நெஞ்சுற்றதொர்பெற்றிநினைப்பரிதால். (உக0)

அக்காலமும்வேள்வியினன்றிவனே
டெக்காலுநலிந்துமொரீறுபெறான்
முக்காலின்முடிந்திடுவான்முயல்வான்
புக்கானவ்விராகவன்வைகுபுனம். (உகக)

தன்மானமிலாததயங்கொளிசால்
மின்வானமுமண்ணும்விளங்குவதோர்
பொன்மானுருவங்கொடுபோயினனால்
நன்மானனையாடனைநாடுறுவான். (உக௨)

கலைமான்முதலாயினகண்டவெலாம்
அலைமானுறுமாசையின்வந்தனவால்
நிலையாமனவஞ்சனைநேயமிலா
விலைமாதர்கண்யாரும்விழுந்தெனவே. (உக௩)

பொய்யாமெனவோதுபுறஞ்சொலினால்
நையாவிடைநோவநடந்தனளால்
வைதேகிதன்வால்வளைமென்கையெனும்
கொய்யாமலரான்மலர்கொய்துறுவாள். (உக௪)

உண்டாகியகேடுடையார்துயில்வாய்
எண்டானுமியைந்தியையாவுருவம்
கண்டாரெனலாம்வகைகண்டனளால்
பண்டாருமுழுவிடர்பாடுறுவாள். (உக௫)

காணாவிதுகைதவமென்றுணராள்
பேணாதநலங்கொடுபேணினளால்
வாணாளையிராவணன்மாளுதலால்
வீணாளினறம்புவிமேவுதலால். (உக௬)

நெற்றிப்பிறையாண்முனிநின்றிடலும்
முற்றிப்பொழிகாதலின்மூந்துறுவாள்
பற்றித்தருகென்பெனெனப்பதையா
வெற்றிச்சிலைவீரனைமேவினளால். (௨௧௭)

ஆணிப்பொனிளக்கியதாய்கதிரால்
சேணிற்சுடர்கின்றதுதிண்செவிகால்
மாணிக்கமயத்தொருமானுளதால்
காணத்தகுமென்றனள்கைதொழுவாள். (௨௧௮)

இம்மானிநிலத்தினிலில்லையெனா
எம்மானிதனைச்சிறிதெண்ணல்செயான்
செம்மானவள்சொற்கொடுதேமலரோன்
அம்மானுமருத்தியனாயினனால். (௨௧௯)

ஆண்டங்கிளையோனுரையாடினனால்
வேண்டும்மெனலால்விளைவன்றிதெனான்
பூண்டுஞ்சுபொலங்கொடியேயதுநாம்
காண்டும்மெனும்வள்ளல்கருத்துணர்வான். (௨௨0)

காயங்கனகம்மணிகால்செவிவாய்
பாயும்முருவோடிதுபண்பெனலால்
மாயம்மெனலன்றிமனக்கொளவே
ஏயும்மிறையையுறவென்றனவே. (௨௨௧)

இல்லாவுலகின்னிலைநேர்மையினால்
வல்லாருமுணர்ந்திலர்மன்னுயிர்தாம்
பல்லாயிரகோடிபரந்துளவால்
இல்லாதனவில்லையிளங்குமரா. (௨௨௨)

என்னென்றுநினைத்திதிழைத்துளதும்
கன்னங்களின்வேறுளகாணுதுமால்
பொன்னின்னொளிமேனிபொருந்தியவேழ்
அன்னங்கள்பிறந்ததறிந்திலையோ. (௨௨௩

முறையும்முடிவும்மிலைமொய்யுயிரொன்
றிறைவன்னிளையானொடியம்பினனால்
பறையுந்துணையன்னதுபன்னெறிபோய்
மறையும்மெனவேழைவருந்தினளால். (௨௨௪)

(வேறு.)

அனையவள்கருத்தையுன்னவிஞ்சனக்குன்றமன்னான்
புனையிழைகாட்டதென்றுபோயினன்பொருதசிந்தைக்
கனைகழற்றம்பிபின்புசென்றனன்கடக்கவொண்ணு
வினையெனவந்துநின்றமானெதிர்விழித்தகன்றே.

நோக்கியமானைநோக்கி நுதியிழைமதியிஞென்றும்
தூக்கிலனன்றிதென்றனை தன்பொருள்சொல்லலாகும
சேக்கையினரவுநீங்கிப்பிறந்ததுதேவர்செய்த
பாக்கியமுடைமையன்றேவன்னதுபமூறுபோமோ. (உஉசு)

என்றெருக்குமென்னலாகுமிலையவிதனைநோக்காய்
நன்றெருக்குழுவமையல்லொற்றனையொக்குமுவமையுண்டோ
பன்னக்கதரளமொக்கும்பசும்புன்மேற்படருமென்று
மின்றெருக்குஞ்செம்பொன்மேனிவெள்ளியின்விளங்கும்புள்ளி (உஉஎ)

வரிசிலைமறைவலோனைமானின்றன்வடிவையுற்ற
அரிவையர்மைந்தர்யாரேயாதரங்கூர்கிலாதார்
உருகியமனத்தவாகிப்பூர்வனபறப்பயாவும்
விரிசுடர்விளக்கங்கண்டவிட்டில்போல்வீழ்வகாணாய். (உஉஅ)

ஆரியனனையகூறவன்னதுதன்னைநோக்கிச்
சீரியதன்றிதென்றுகிளையுயிர்த்தெளிந்ததம்பி
காரியமென்னைபீண்டெக்கண்டதுகனகமானால்
வேரியந்தெரியல்வீரமீள்வதேமென்மையென்றான். (உஉகூ)

ஆற்றவன்பகராமுன்னமங்கனையமுகியாளும்
கொற்றவன்மைந்தமற்றைக்குறைவுடையுழையைவல்லே
பற்றினைதருதிபாயிற்பதியிடைவதிபெய்தப்
பெற்றுழியினிதுண்டாடப்பெறற்கருந்தகைமைத்தென்றாள். (உ௩0)

ஐயநுண்மருங்குநங்கைபணித்தனைசெய்யவையன்
செய்வென்னநகமையநோக்கித்தெளிவுடைச்செம்மல்செப்பும்
வெய்யவல்லரக்கர்வஞ்சம்விரும்பினார்வினையிற்செய்த
கைதவமானென்றுண்ணல்காணுதிகடையினென்றான். (உ௩க)

மாயமேன்மடிவாமன்றேவாளியின்மடிந்தபோது
காய்சினத்தவனைக்கொன்றுகடன்கழித்தோமுமாதும்
ஆயதேற்பற்றிக்கொடுஞ்சொல்லியவிரண்டினுமொன்றும்
தீயதேயுமைத்தியென்றான்றேவரையிக்கண்டீர்ப்பான். (உ௩உ)

பின்னின்றரிலையவென்றுமுணர்கிலம்பிடித்தமாயம்
என்னென்றுந்தெளிதறேற்றும்யாவதீதென்றுமோராம்
முன்னின்றார்முறையினின்றார்முனிந்துளவேட்டமுற்றல்
பொன்னின்றவயிரத்தோளாய்புகழுடைத்தாமன்றென்றான். (உ௩௩)

பகையுடையரக்கரொன்றும்பலவொன்றும்பயிலுமாயம்
மிகையுடைத்தென்றும்பூண்டவிரதத்தைதவிடுமென்றல்
நகையுடைத்தாகுமன்றேயாதலினன்றீதென்றுத்
தகையுடைத்தம்பிக்கண்ணாட்சதுமுகன்றாதைசொன்னான். ([illegible])

ஆரணியகாண்டம்.

அடுத்தவுமெண்ணிச்செய்தலண்ணலேயமைதியன்றோ
விடுத்திதன்பின்னின்றோர்கள்பலருளரொனினும்வில்லால்
தொடுத்தவெம்பகழிதூவித்தொடர்ந்தனென்விரைந்துசென்று
படுக்குவெனதுவன்றாயிற்பற்றினென்கொணர்வெனென்றான். (௨௩௫)

ஆயிடையன்னமன்னாளமுதுகுத்தனையசெய்ய
வாயிடைமழலையின்சொற்கிளியினிற்குழறிமாழ்கி
நாயகநீயேபற்றிநல்கலைபோலுமென்னாச்
சேயரிக்குவளைமுத்தஞ்சிந்துபுசிதறிப்போனாள். (௨௩௬)

போனவள்புலவிநோக்கிப்புரவலன்பொலன்கொடாராய்
மானிதுநானேபற்றிவல்லையின்வருவெனன்றே
கானியன்மயிலன்னாளைக்காத்தனையிருத்தியென்று
வேனகுசரமும்வில்லும்வாங்கினனிளையவனுற்றான். (௨௩௭)

முன்னமுமகவாய்வந்தமேவரிமொருவன்போனான்
அன்னமாரீசனென்றேயயிர்த்தனனிளையையைய
இன்னமுங்காண்டிவாழியேயெனவிருகைகூப்பிப்
பொன்னனாள்புக்கசாலைகாத்தனன்புறத்துநின்றே. (௨௩௮)

மந்திரத்திளையோன்சொன்னவாய்மொழிமனத்துக்கொள்ளான்
சந்திரற்குவமைசான்றவதனத்தாள்சலத்தைநோக்கிச்
சிந்துரப்பவளச்செவ்வாய்முறுவலன்சிகரச்செவ்விச்
சுந்தரத்தோளினனம்மானினைத்தொடரலுற்றான். (௨௩௯)

மிதித்ததுமெல்லமெல்லவெறித்ததுவெருவிமீதிற்
குதித்ததுசெவியைநீட்டிக்குறுபதமுந்தைதக்கூட்டி
உதித்தெழுமூழையுள்ளுமெஃகினையுருவச்செல்லும்
கதிக்கொருகல்விவேறேகாட்டியதொத்ததன்றே, (௨௪0)

நீட்டினனுலகமூன்றுநின்றெடுத்தளந்தபாதம்
மீட்டுநாமுனைத்தங்கம்மாவேறுபோரண்டமுண்டோ
ஓட்டினன்றொடர்ந்ததன்னையொழிவறநிறைந்ததன்மை
காட்டினனன்றியன்றக்கடுமையார்கணிக்கற்பாலார். (௨௪௧)

குன்றிடையிவருமேகக்குழுவிடைக்குதிக்குங்கூடச்
சென்றிடினகலுந்தாழிற்றீண்டலாந்தகைமைத்தாகும்
நின்றதேபோலநீங்குநிதிவழிநேயநீட்டும்
மன்றலங்கோதைமாதர்மனமெனப்போயிற்றம்மா. (௨௪௨)

காயம்வேறாகிச்செய்யுங்கருமம்வேறாகிற்றன்றே
ஏயுமேயென்னின்முன்னமெண்ணமேயிளவற்குண்டே
ஆயுமேனறுதல்செல்லாவரக்கரானவர்கள்செய்த
மாயமேயாயதானவருந்தியதென்றான்வள்ளல். (௨௪௩)

வேறு)

டற நவாணினியலலளபகழியால
செற ரவாணிழசெலு நலுறருனென
மா றமாயவரக்கனமனக்சொளா
உ ற ர ்வசசதிறுமபரி ருஙகிறுன (உ௪௪)

ருககண ததிணிலைய ஹமவெயயதன
சக்சர ததிறறைநவுரிதாய ாா
செககாமேனிபபசழிசெலுததிறுனெ
புககதேயமபுககிளாறுயிாமபாகசெறு. (உ௪௫)

ாடடிலைசசரமவ ருசனொெஞ்சு றப
படடசபபொழு தபகுவாயிறுல
அடடயுலகிறுமபபு முமபுக
விடட ற ரொருகுணறெணவீழநசனன. (உ௪௬)

வெ பயவனறறுருவொடுவீ தலும
செயயத றெணசசெப யதமபியை
ஐ பனவலல ளன ரு யி வலலறுன
உயயவநதவளவ ணா றுணணிறுன. (உ௪௭)

ஆசைசீளததா றினணவீழநசவந
நீசன மணி யகி றுட றுகசிறுன
மாசின ரா வ வளவியினவநதமா
ரீச ணயிடமெ ன நககறிறுன. (உ௪௮)

உழைந ளிபுரமப டபுவலிபோன
மா தூமா யயினென கு லாவிசைத
த ற க த ணட கடடயாவெயதுமால
ப ழுமகமீனறியென வளளமவருநதிறுன. (உ௪௯)

ம ற ி ண மா பமாரீசனென
றறநழுலை ஹுண நதானென்னனறுடை
ஆறறமெற மறியிண ரு சலாண
மதற ப விளமயானெனததேறிறுன (உ௫௦)

மாளவநதபொருளாகவநதானலன
சூழ்வதாாபொருளுணடிவன சொல்லிறுல்
மூளவநதமதுமுடியாமுனம
மீளவநதலனெனறவணமீணடனன. (உ௫௧)

எ-ஆவது. மாரீசனவதைபபடலமுறறிறறு. ஆ௰ திருவிருத்தம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

சங்கடுத்ததனிக்கடன்மேனியார்க்
கங்கடுத்தநிலைமையறைந்தனம்
கொங்கடுத்தமலர்க்குழற்கொம்பனாட்
கிங்கடுத்ததகைமையியம்புவாம். (க)

எயிறலைத்தழுழைதிறந்தேங்கிய
செயிர்தலைக்கொண்டசொற்செவிசேர்தலும்
குயிறலைத்திடையுற்றதெனார்கொள்கையாள்
வயிறலைத்துவிழுந்துமயங்கினாள். (உ)

பிடித்துநல்லிவ்வுழையெனப்பேதையேன்
முடித்தனென்முதல்வாழ்வெனமொய்குழல்
கொடிப்படிந்தெனநெடுங்கோளரா
இடிக்குடைந்தெனப்புரண்டேங்கினாள். (ங)

குற்றம்வீந்தகுணத்தினெங்கோமகன்
மற்றைவாளரக்கன்புரிமாயையால்
இற்றுவீந்தனனென்னவுமென்னையல்
நிற்றியோவிளையோயொருநீயெனா. (ச)

(வேறு.)

எண்மையாருலகினினிராமனுக்கிறைமா
திண்மையாருளரெனச்செப்புவர்பாலரோ
பெண்மையாலுரைசெயப்பெற்றிலேனிராவணா
உண்மையானனையவட்குரைக்கூறினேன். (ரு)

ஏழுமேகடலுலகேழுமேழுமே
சூழுமேழ்மலையுமேழ்நாடர்தஞ்சூழ்வயாய்
வாழுமேழையர்சிறுவலிக்கவையாடரோ
தாழுமேயிராகவன்றனிமைமேசெய்யலீர். (சா)

பாரொனக்கனலெனப்புனலெனப்பகா
பேரொனத்திசையெனமுனிவிர்பெருமாஸ்
காரொனக்கரியவக்கமலக்கண்ணனை
யாரொனக்கருதியிவ்விடரிழைக்கின்றீர். (எ)

இடைந்துபோய்நிசாசரர்க்கிராமனெவ்வம்வந்
தடைந்தபோதனைக்குமேயமைக்குமாமெனின்
மிடைந்தபேரண்டங்கண்மேலகீழன
உடைந்துபோமயன்முதலுயிருந்தீயுமால். (அ)

மாற்றமென்பகர்வதுமண்ணும்வானமும்
போற்றவன்திரிபுரமெரித்தபுங்கவன்
ஏற்றினின்றெய்தவில்லிற்றதெம்பிரான்
ஆற்றலினமைவதோராற்றலுண்மையோ. (கூ)

காவலனீண்டு[illegible]கருதிறமெய[illegible]
மூவகையுலகமுமுடியுமுந்துள
தேவருமுனிவருமு[illegible]செய[illegible]போர்
ஏவருமவீந்துளாரறமுமெஞ்சுமால. (க0)

பரக்கவெண்பகாவத்பகழிபண்ணாவண
[illegible]ரக்கவங்க[illegible]பட[illegible]சா[illegible]கின
அரக்கன[illegible]புனைமெட[illegible]கர[illegible]நிருணக[illegible]
கிரக்கமுற[illegible]ங்கவிரு[illegible]நீண்டொரு (கக)

என்றவனியமட[illegible]மெமநதசீ[illegible]த[illegible]
தொன்றனவினனலை[illegible]கொத[illegible]முளத்தள
[illegible]னறநினனிலை[illegible]பிதுநெறியி[illegible]றனை
வனற[illegible]கணணினை[illegible]வயிர[illegible]து[illegible]வயா[illegible] (கஉ)

ஒருபகலபழகி[illegible]ருயி[illegible]பி[illegible]
பெருமகனுல்வு[illegible]பற[illegible]கடநீ
வெருவலகின[illegible]வ[illegible]ணய[illegible]ன்னை
எரியிடைவீழ்[illegible]யிர[illegible]பபவீணடென்று (கங)

தாம[illegible]வனதுந[illegible]தாஷமன[illegible]ணமபோல
நா[illegible]டெ[illegible]நி[illegible]சின[illegible]டனைச
செம[illegible]மெ[illegible]கிச[illegible]டிப
பூமுகநெடுகிலைமடம[illegible]செ[illegible]வான (கச)

[illegible]நெஞ்சுவ[illegible]னினை[illegible]சாலவையா[illegible]
அருசுமெ[illegible]ம[illegible]நீ
நெஞ்சிருபடிப[illegible]குகின[illegible]னை
வெருஉகினை[illegible]யிய[illegible]வெமவ[illegible]மா. (கரு)

போகினெனடியனெனெ[illegible]நயெந்தும[illegible]
[illegible]கினன[illegible]சா[illegible]னை[illegible]ம[illegible]
[illegible]கன[illegible]நிரு[illegible]கொழி[illegible]யியெனறுபின
வேகின[illegible]சிந[illegible]நயான[illegible]டகொணடேகினன. (கசா)

இருபபனைவெரியிடையிற[illegible]பாவிய[illegible]
பொருபபுமய[illegible]னி[illegible]ட[illegible]பாயெ[illegible]யெனன
அருபபமில்கெடுவெந்தடயுமாருயிர
விருபபமெறகெனசெயலெனறுவிமமினனை. (கஎ)

அறந்துறைவழியிலதாகிறுக்கலாம[illegible]
இறந்துபாடிவாய்க்குறயிதனினிவவழி
துறந்துபோழிதனையதுணிவெனவொருவிவினைப்
பிறந்துபோந்திதுபமெபேதையேனென்று. (கஅ)

ஆரணியகாண்டம்.

போனதுப்புரிவல்யான்புகுந்ததுண்டெனின்
காவல்செய்யெருவையின்றலைவன்கண்ணுறும்
ஆவதுகாக்குமென்றறிவித்தவ்வழி
தேவர்செய்தவத்தினாற்செம்மலேகினான். (க௯)

இளையவனோகலுழிறவுபார்க்கின்ற
வளையெயிற்றிராவணன்வஞ்சமுற்றுவான்
முளைவரித்தண்டொருமூன்றுமுப்பகைத்
தளையரிதவத்தவர்வடிவந்தாங்கினான். (உ0)

ஊணிலனெனவுலந்தமேனியன்
சேணெறிவந்ததோர்வருத்தச்செய்கையன்
பாணியினடத்திடைப்படிக்கின்றானென
வீணையினிசைபடவேதம்பாடுவான். (உக)

பூப்பொதியவிழ்ந்தனநடையன்பூதலம்
தீப்பொதிந்ததாமெனமிதிக்குஞ்செய்கையன்
காப்பருநடுக்குறுங்காலன்கையினன்
மூப்பெனும்பருவமுமுனியமுற்றினான். (உஉ)

தாமரைக்கண்ணொடோர்தவத்தின்மாலையன்
ஆமையினிருக்கையன்வளைந்தவாக்கையன்
நாமநூன்மார்பினனணுகினனரோ
தூமனத்தருந்ததியிருந்தசூழல்வாய். (உ௩)

தோமறுசாலையின்வாயிறுன்னினான்
நாமுதற்குழறிடநடுங்குசொல்லினான்
யாவிரிவ்விருக்கையுளிருந்துளீரென்றான்
தேவருமருள்கொளத்தெரிந்தமேனியான். (உ௪)

தோகையுமிவ்வழித்தோமில்சிந்தனை
சேகறுநோன்பினனொன்றுஞ்சிந்தையாள்
பாகியல்கிளவியாள்பவளக்கொம்பர்போன்
றேகுமினீண்டெனவெதிர்வந்தெய்தினாள். (உ௫)

வெற்பிடைமதமெனவியர்க்குமேனியன்
அற்பினற்றிரைபுரளாசைவேலையன்
பொற்பினுக்கணியினைப்புகழின்சேக்கையைக்
கற்பினுக்கரசியைக்கண்ணினோக்கினான். (உ௬)

ஓங்கலினுருவினைச்சொல்லினும்பெரும்
ஓங்கியவழகினாளுருவங்காண்டலும்
ஏங்கினன்மனனிலையாதென்றுன்னுவாம்
வீங்கினமெலிந்தனவீரத்தோள்களே. (உ௭)

புனமயிற்சாயலினெழிலிற்பூநறைச்
சுனைமடுத்துண்டிசைமுரலுந்தும்பியின்
இனமெனக்களித்துளதென்பதென்னவன்
மனமெனக்களித்ததுகண்ணின்மாலையே. (உஅ)

செயிதழ்த்தாமரைச்செய்கைதீர்ந்திவண்
மேயவண்மணிநிறமேனிகாணுதற்
கேயுமேயிருபதிங்கிமைப்பிறைட்டங்கள்
ஆயிரமில்லையென்றல்லலெய்தினான். (உ௯)

அரைகடையிட்டமுக்கோடியாயுவும்
புரைதபுதவத்தின்யான்படைத்தபோதுமே
விரைவளைமுன்கையிந்நின்றநங்கையின்
கரையறுநலக்கடற்கென்றுன்னினான். (௩0)

தேவருமவுணருஞ்சேவிமாரொடும்
ஏவல்செய்தொழிலினர்குடிமைசெய்திட
மூவுலகமுமிவர்முறையினாளயான்
ஏவல்செய்துய்குவெனிவளென்றுன்னினான். (௩க)

உளைவுறுதுயர்முகத்தொளியிராமெனின்
முளையெயிறிலங்கிடமுறுவலென்படும்
தளையவிழ்குழலிவட்கண்டெந்தவென்
இளையவட்களிப்பெனென்னசென்றெண்ணினான். (௩உ)

ஆண்டகையானையனைப்புல்லியாசைமேல்
மூண்டெழுமிந்தனைமுறையிலொன்றனைக்
காண்டலுங்கண்ணினீர்துடைத்தகற்பினாள்
ஈண்டெழுந்தருளுமென்றிணையகூறினாள். (௩௩)

ஏத்தினளெய்தலுமிருத்தியீண்டென
வேத்திரத்தாசனம்விதியினல்கினான்
மாத்திரிதண்டபல்லவைத்தவஞ்சனும்
பூததொடர்சாலையிலிருந்தபோழ்தினே. (௩௪)

நடுங்கினமலைகளுமாருநாவலிக்
தடங்கினபறவையும்விலங்குமஞ்சின
படங்குறைந்தொதுங்கினபாம்புபாதகக்
கடுந்தொழிலரக்கனைக்காணுங்கண்ணினே. (௩௫)

இருந்தவன்யாவதிவ்விருக்கையிங்குறை
அருந்தவன்யாவனீர்யாரையென்றலும்
விருந்தினரிவ்வழிவிரகிலாவொவைப்
பெருந்தடங்கண்ணவள்பேசன்மேயினாள். (௩௬)

ஆரணியகாண்டம்.

தயரதன்றொல்குலத்தலைவன்றம்பியோ
டுயர்குலத்தன்னைசொலுச்சியந்திறன்
அயுர்விலதிவ்வழியுறையுமன்னவன்
பெயரினைத்தெரிகுதிர்பெருமையீரென்றாள். (௧௭)

கேட்டனனென்கண்டிலென்கெழுவுசங்கைதீர்
நாட்டிடையொருமுறைநண்ணினன்மலர்
வாட்டடங்கண்ணினீர்யானொர்மாமகன்
காட்டிடையரும்பகல்கழிக்கின்றினென்றான். (௧௮)

அருகமாநெறிபட்டடிணூர்மலரால்
கினைவமுதார்செய்வம்வெற்றியாதலிற்குறினான்
சனகன்மாமகள்பெயர்சனகிகாகுத்தன்
மனைவியானென்றனன்மறுவில்கற்பினாள். (௧௯)

அவ்வழியனையனவுரைத்தவாயிடை
வெவ்வழிவருந்திவிர்யினைத்தமைப்பினர்
இவ்வழியிருவினைகடக்கவெண்ணினோர்
எவ்வழிநின்றமிங்கெய்தினீரென்றான். (௨௦)

இந்திரற்கிந்திரனொருசலாகலாச்
சுந்தரன்றன்முகன்மாயிற்றென்றிறன்
அந்தரத்தோடமெவ்வுலகுமாள்கின்றன்
மந்திரத்தருமறைநவைகுநாவினன். (௨௧)

ஈசனண்டிருந்திபரிலங்குமால்வரை
ஊசிவேரொடும்பறித்தெடுத்தமர்ந்தான்
ஆசைகள்சுமந்தபேரளவில்யானைகள்
பூசல்செய்மருப்பினைப்பொடிசெய்தானினான். (௨௨)

கிற்பவர்கடைத்தலைநிறைந்ததேவரோ
சொற்பகுமற்றவன்பெருமைசொல்லுங்கால்
கற்பகமுதலியநிதியங்கையன
பொற்பகமாணகரிலங்கைப்பொன்னகர். (௨௩)

ஏனைதிலோத்தமைமுதலமேழையர்
வானகந்தாரந்துவந்தவன்றன்மாட்சியால்
ஊனமிலடைப்பைபகால்வருடலொண்செருப்
பானவைமுதற்றொழிலவராகுமே. (௨௪)

சந்திரனிரவியென்பவர்கடாமவன்
சிந்தனைவழிநிலைதிரிவர்தேசுடை
இந்திரன்முதலியவமரரீண்டவன்
[illegible]கோயிலின்காவலாளரோ. (௨௫)

பொன்னகரத்தினும்பொலங்கொண்கர்தம்
தொன்னகரத்தினுந்தொடர்ந்தமாநிலத்
தெந்நகரத்தினுமினியவீண்டவன்
நன்னகரத்தனநவையிலாதன. (௬௬)

தாளுடைமலருளான்றந்தவந்தயில்
நாளுடைவாழ்க்கையனரிபாகத்தன்
வாளுடைத்தடக்கையன்வார்வைத்தவெங்
கோளுடைச்சிறையினன்குணங்கண்மேன்மையான். (௬௭)

வெம்மைநீரொழுக்கினன்விரிந்தகேள்வியன்
செம்மையோன்மன்மதன்றிசைக்குஞ்செவ்வியன்
எம்மையோரனைவருமிறைவனொன்றெனும்
மும்மையோர்பெருமையுமுற்றும்பெற்றியான். (௬௮)

அனைத்துலகினுமழகமைந்தநங்கையர்
எனைப்பலரவன்றனதருளினிச்சையோர்
நினைத்தவருருகவுமுதவரோர்கிலன்
மனக்கினியாளொருமாதர்நாடுவான். (௬௯)

ஆண்டையானரசுவீற்றிருந்தவந்நகர்
வேண்டியாள்சில்பகலுறையவேண்டினேன்
நீண்டனனிருந்தவற்பிரிந்தநெஞ்சினேன்
மீண்டனெனென்றனன்வினையமுன்னுவான். (௭௦)

வேதமும்வேதியாருளும்வெஃகலாச்
சேதனோமன்னுயிர்தின்னுந்தீவினைப்
பாதகவரக்கர்தம்பதியின்வைகுதற்
கேதுவென்னுடலமுமிகையென்றெண்ணுவீர். (௭௧)

வனத்திடைமாதவர்மருங்குறைவுகலிர்
புனத்திருநாட்டிடைப்புனிதரூர்புக
நினைத்திலிரறநெறிநினைக்கிலாதவர்
இனத்திடைவைகினிரென்செய்தீரென்றாள். (௭௨)

(வேறு)

மங்கையஃதுரைத்தல்கேட்டவரம்பிலான்மறுவிற்றீர்ந்தார்
வெங்கண்வாளரக்கரென்னவெருவலமெய்ம்மைநோக்கின்
திங்கள்வாண்முகத்தினாய்த்தேவரிற்றீயரல்லர்
எங்கள்போலியர்க்குநல்லார்நிருதரோபோலுமென்றான். (௭௩)

சேயிழையன்னசொல்லத்தீயவர்ச்சேர்தல்செய்தார்
தூயவரல்லர்சொல்லிற்றென்னெறிதொடர்ந்தேழான்றாள்
மாயவலலரக்கர்வல்லர்வேண்டுருவுரிக்கவேண்ட
தாயவளறிதறேற்றாளாகலினயலொன்றெண்ணாள்

உயிர்த்தனளாருமென்றேனாயுறவுத்துக்கொண்டான்
பெயர்த்ததுதடைக்கவெண்ணிப்பிறிதுறப்பேசலுற்றான்
மயக்கருமுலகமுன்றின்வாழ்பவர்க்கனையவல்லோர்
இயற்கையிற்றிரியினல்லாலியற்றலாநெறியென்னென்றான். (ருரு)

திறந்தெரிவஞ்சனச்சொற்செப்பலுஞ்செப்பமிக்காள்
அறந்தருவள்ளலீண்டிங்கருந்தவமுயலுநாளுள்
மறந்தலைதிரிந்தவாழ்க்கையரக்கர்தம்வருக்கத்தோடும்
இறந்தனர்முடிவர்பின்னரிடரிலையுலகமென்றாள். (ருசு)

யானவளுரைத்தலோடுமோனிடரரக்கர்தம்மை
மீனெனமிளிருங்கண்ணாய்வேரறவெல்வரென்னின்
யானையினத்தையெல்லாமிளமுயல்கொல்லும்பின்னும்
கூனுகிர்மடங்கலேற்றைக்குறுநிலைமான்கொல்லுமென்றான். (ருஎ)

மின்றிரண்டனையபங்கிவிராதனும்வெகுளிபொங்கக்
கன்றியமனத்துவென்றிக்கரன்முதற்கணக்கிலோரும்
பொன்றியபூசலொன்றுங்கேட்டிலிர்போலுமென்றாள்
அன்றவர்க்கடுத்ததுன்னிமழைக்கணீரருவிசோர்வாள். (ருஅ)

வாளரிவள்ளறன்னைவிலங்கைமாதிருதரெல்லாம்
கேளொடுமறியுமாறும்வானவர்கிளருமாறும்
நாளையேகாண்டிரன்றேனவையிலீருணர்கிலீரோ
மீளருந்தருமந்தன்னைவெல்லுமோபாவமென்றான். (ருகூ)

தேனுடையமுதளாயவன்னமென்சிலசொன்மாலை
தானுடைச்செவிகளூடுதவழுறத்தளிர்த்துவீங்கும்
ஊனுடையுடம்பினுண்ணுமுருசெழுமானமூன்ற
மானிடர்வலியொன்றமாற்றத்தாற்சீற்றம்வைத்தான். (சு0)

சீறினனுரைசெய்வானச்சிலைவலிப்புல்லியோர்கள்
ஈறுருமனிதன்செய்தானென்றெடுத்தியம்பினுயேல்
தேறுதிநாளையேயவ்விருபதுதிண்டோள்வாடை
கீறியபொழுதுபூளைவீயெனவீவனன்றே. (சுக)

மேருவைப்பறிக்கவேண்டின்விண்ணினையிடிக்கவேண்டின்
நீரினைக்கலக்கவேண்டினெருப்பினையவிக்கவேண்டின்
பாரினையெடுக்கவேண்டிற்பலவினைசிலசொல்லேறாய்
யாரெனக்கருதிச்சொன்னாயிராவணற்கரிதென்னென்றான் (சுஉ)

ஆரணாகுதிரதோள்சாலவுளவெனினாற்றலுண்டோ
ஈரண்டகிரிலங்கைவேந்தைச்சிறைவைத்தகழற்கால்வீரன்
இரண்டதோள்வனத்தையெல்லாஞ்சிறியதோர்பருவந்தன்னில்
[illegible]தாளொருவனன்றேமழுவினாலெறிந்தானென்றான். (சுங)

என்றிவளுரைத்தலோடுமெரிந்தனநயனந்திக்கிற்
சென்றனதிரடோள்வானந்தீண்டினமகுடந்திண்கை
ஒன்றொடொன்றடித்தமேகத்துருமெனவுயிர்த்தவூழி
வென்றனவெகுளிபொங்கவிட்டதுமாயவேடம். (௬௪)

இருவினைதுறந்தமேலோரல்லன்கொலிவனென்றெண்ணி
அரிவையுமையமெய்தாவாரிவன்றானென்றென்றும்
தெரிவருநிலையளாகத்தீயிடைத்தூரவந்தானே
உருகெழுசீற்றம்பொங்கிப்பணம்விரித்துயர்ந்ததொத்தான். (௬௫)

ஆற்றவெந்துயரத்தன்னாளாண்டுற்றவலக்கணோக்கின்
ஏற்றமென்னினைக்கலுறுமெதிரொடுத்தியம்பலாகும்
மாற்றமொன்றில்லைசெய்யும்வினையில்லைவரிக்கலாகாக்
கூற்றம்வந்துற்றகாலத்துயிரெனக்குலைவுகொண்டாள். (௬௬)

விண்ணவரேவல்செய்யவென்றவென்வீரம்பாராய்
மண்ணிடைப்புழுவின்வாழுமானுடர்வலியவொன்றாய்
பெண்ணெனப்பிழைத்தாயன்றேலுன்னையான்பிசைந்துதின்ன
எண்ணுவெனெண்ணிற்பின்னையென்னுயிரிழப்பெனென்றான். (௬௭)

குலைவுறலன்னமுன்னம்பாவாயுங்கும்பிடாவென்
தலைமிசைமகுடமென்னத்தனிக்கதனியினிதுதாங்கி
அலகில்பூணரம்பைமாதர்முறைமையேவலசெய்ய
உலகமீரேழுமாளுஞ்செல்வதத்துளுறைதியென்றான் (௬௮)

செவிகளைத்தளிர்க்கையாலேசிக்குறச்சேமஞ்செய்தாள்
கவினுறும்வெஞ்சிலைக்கைவென்றிக்காகுத்தன்கற்பினேனைப்
புலியிடையொழுக்கநோக்காய்பொங்கெரிப்புனிதரீயும்
அவியைநாய்வேட்டதென்னவென்சொனாயரக்கவென்றாள். (௬௯)

புன்னுனைநீரினுய்த்தாய்போதலேபுரிந்துநின்ற
இன்னுயிரிழத்தலஞ்சியிற்பிறப்பழிதலுண்டே
மின்னுயிர்த்துருமிற்சீறும்வெங்கணைவீரவூர்முன்னம்
உன்னுயிர்க்குறுதிநோக்கியொளிதியாலோடியென்றாள். (௭௦)

என்றவளுரைக்கநின்றவிரக்கமிலரக்கனெய்த
உன்றுணைக்கணவனம்பவவுயிர்திசைசுமந்தவோங்கல்
வன்றிறன்மருப்பினூற்றன்மடித்தவென்மார்பின்வந்தால்
குன்றிடைதொடுத்துவிட்டபூங்கணைகொல்லதென்றான் (௭௧)

அணங்கினுக்கணங்கனாய்நின்னாசைநோயகத்துப்பொங்க
உணங்கியவுடம்பினேனுக்குயிரினையுதவியும்பர்க்
கணங்குழைமகளிர்க்கெல்லாம்பெரும்பதங்கைக்கொளென்று
வணங்கினனுலகந்தாங்குமலையினும்வலியதோளான்.

(வேறு.)

துறைவாயவன்வந்தடிதாழுதலும்
கறைவாள்படவாவிகலங்கினள்போல்
இறைவாவிளையோயெனவேங்கினளால்
பொறைதானுயிர்போவதுபோற்புகல்வாள். (எ௩)

ஆண்டாயிடைதீயவனாயிழையைத்
தீண்டாலெனுமேலுமாசிந்தைசெயாத்
தூண்டானெனலாமுயர்தோள்வலியால்
கீண்டானிலம்யோசனைகீழொடுமேல். (எ௪)

கொண்டானுயர்தேர்மிசைகோல்வளையாள்
கண்டாடனதாருயிர்கண்டிலளால்
மண்டானுறுமின்னின்மயங்கினளால்
விண்டான்வழியாவெழுவான்விரைவான். (எ௫)

விடுதேரெனவெங்கனல்வெந்தழியும்
கொடிபோல்புரள்வாள்குலைவாளயர்வாள்
துடியாவிழுவாடயராவெழுவாள்
கடிதாவறனேயிதுகாவெனுமால். (எ௬)

மலையேமரனேமயிலேகுயிலே
கலையேபிணையேகளிறேபிடியே
நிலையாவுயிரோநிலைதேறினர்போய்
உலையாவலியாருழைநீருரையீர். (எ௭)

செஞ்சேவகனார்நிலைநீர்தெரிவீர்
மஞ்சேபொழிலேவனதேவதைகாள்
அஞ்சேலென்நல்குதிரோவடியேன்
உஞ்சாலதுதானிழிபோவுரையீர். (எ௮)

நிருதாதியர்வேரறநீண்முகில்போல்
சரதாரைகள்வீசினிர்சார்கிலிரோ
வரதாவிளையோய்மறுவேதுமிலாப்
பரதாவிளையோய்பழிபூணுதிரோ. (எ௯)

கோதாவிரியேகுளிர்வாய்குழைவாய்
மாதாவனையாய்மனனேதெளிவாய்
ஓதாதுணர்வாருழையோடினைபோய்
நீதான்வினையேனிலைசொல்லலையோ. (அ0)

மூந்துஞ்சுனைகாண்முழைவாளரிகாள்
இந்தங்கிலனோடுமெடுத்தகைநா
ஐந்தைந்தலைபத்துமலைந்தலையச்
சிந்தும்படிகண்டுசெகுத்திடுவீர். (அ௧)

(வேறு.)

என்றின்னபலவும்பன்னியிரியலுற்றாற்றவானைப்
பொன்றுன்னுபுணர்மென்கொங்கைப்பொலங்குழாய்போரிலென்னைக்
கொன்றன்னைமீட்பர்கொல்லம்மானுடர்கொள்கவென்று
வன்றிண்கையெறிந்துநக்கான்வாழ்க்கைநாள்வறிதுவீழ்வான். (அஉ)

வாக்கினலன்றன்சொல்லமாயைபால்வஞ்சமாறன்
றாக்கினயாக்கியன்னையாருயிருண்ணுங்கூற்றைப்
போக்கினய்புந்துகொண்டுபோகின்றாய்பொருதுநின்னைக்
காக்குமாகாண்டியாயிற்கடவலுன்றேறையென்றாள். (அங)

மீட்டுமொன்றுரைசெய்வாணீவீரனேல்விரைவின்மற்றுன்
கூட்டராமரக்கர்தம்மைக்கொன்றங்கைகொங்கைமூக்கும்
வாட்டினார்வனத்திலுள்ளார்மானிடரொன்றவார்த்தை
கேட்டிமிம்மாயஞ்செய்ததச்சத்தின்கிளர்ச்சியன்றே. (அச)

மொழிதருமளவினங்கைகேளிதுமுரணில்யாக்கை
இழிதருமனிதரோடேயான்செருவேற்பலென்றால்
விழிதருநெற்றியான்றன்வெள்ளிவெற்பெடுத்ததோட்குப்
பழிதருமதனிற்சாலப்பயன்றரும்வஞ்சமென்றான். (அரு)

பாவையுமதனைக்கேளாத்தங்குலப்பகைஞர்தம்பால்
போவதுகுற்றம்வாளிற்பொருவதுநாணம்போலாம்
ஆவதுகரப்பினனைவஞ்சிக்குமாற்றலேயாம்
ஏவமென்பழிதானென்னையிரக்கமிலரக்கர்க்கென்றாள். (அசு)

என்றுமவ்வேலையின்கணங்கடாபோவதென்று
நின்னிலென்றிடித்தசொல்லனெருப்பிடைப்பரப்புங்கண்ணன்
மின்னெனவிளங்கும்வீரத்துண்டத்தன்மேருவென்னும்
பொன்னெடுங்குன்றிட்வானின்வருவதேபோலுமெய்யான். (அஎ)

பாழிவன்கிரிகளெல்லாம்பறித்தெழுந்தொன்றோடொன்று
பூழியினுதிரவிண்ணிற்புடையுறக்கிளர்ந்துபொங்கி
ஆழியுமுலகுமொன்றாயழிதரமுழுதும்வீசும்
ஊழிவெங்காற்றிதென்னவிருசிறையூதைமோத. (அஅ)

(வேறு.)

சாகைவன்றலையொடுமரமுந்தாழமேல்
மேகமும்விண்ணின்மீச்செல்லமீமிசை
மாகவெங்கலுழனும்வருகின்றானென
நாகமும்படமொளித்தொதுங்கிநையவே. (அகூ)

யானையும்யாளியுமுதலயாவையும்
கானொடுமரத்தொடுதூறுகல்லிவை
மேனிறைந்திருசிறைவீச்சினேறலால்
வானமுந்தானமுமாறுகொண்டவே. (கூ0)

உத்தமன்றேவியையுல்கொடோங்குதேர்
வைத்தனையேகுவதெங்குவானிறோ
டித்தனைதிசையையுமறைப்பெனீண்டெழுப்
பத்திரச்சிறைகளைவிரிக்கும்பண்பினான். (௯௧)

வந்தனனெருவையின்மன்னன்மாண்பிலான்
எந்திரத்தேர்செலவொழிக்குமெண்ணினான்
சிந்துரக்கால்சிரஞ்செக்கர்சூடிய
கந்தரக்கைலையைநிகர்க்குங்காட்சியான். (௯௨)

(வேறு.)

ஆண்டுற்றவணங்கிளையஞ்சலெனாத்
தீண்டுற்றிலனென்றுணர்சிந்தையினான்
மூண்டெழுவெங்கதமுற்றிலனால்
மீண்டுற்றனையாடலைமேயினனால். (௯௩)

கெட்டாய்கிளையோடுநின்வாழ்வையெலாம்
சுட்டாயிதுவென்னதொடங்கினைநீ
பட்டாயெனவேகொடுபத்தினியை
விட்டேகுதியால்விளிகின்றிலையால். (௯௪)

பேதாய்பிழைசெய்தனைபேருலகின்
மாதாவனையாளைமனக்கொடுநீ
யாதாகநினைத்தனையெண்ணமிலாய்
ஆதாரநினக்கினியாருளரோ. (௯௫)

உய்யாமன்மலைந்துமராருயிரை
மெய்யாகவிராமன்விருந்திடவே
கையாரமுகந்துகொடந்தகனார்
ஐயாபுதிதுண்டதறிந்திலையோ. (௯௬)

கொடுவெங்கரிகொல்லியவந்ததன்மேல்
விடுமுண்டைகடாவவிரும்பினையே
அடுமென்பதுணர்ந்திலையாயினும்வன்
கடுவுண்டுயிரின்னிலைகாணுதியோ. (௯௭)

எல்லாவுலகங்களுமிந்திரனும்
அல்லாதவர்மூவருமந்தகனும்
புல்வாய்ப்புலிகண்டதுபோல்வரலால்
வில்லாளனைவெல்லுமிடுக்குளரோ. (௯௮)

இம்மைக்குறவோடுமிறந்தழியும்
வெம்மைத்தொழிலிங்கிதுன்மேலிலையால்
அம்மைக்கருமாநரகந்தருமால்
[illegible]மாகவெண்ணினைநீ. (௯௯)

முத்தேவரின்மூலமுதற்பொருளாம்
அத்தேவரிம்மானிடராகலினால
எத்தேவரொடெண்ணுவதெண்ணமிலாய்
பித்தேறினையாதல்பிழைத்தனையால (க00)

பரம்பற்றியபோர்விடையோனருளால
வரம்பெற்றவுமற்றுளவிஞ்சைகளும்
உரம்பெற்றனவாவனவுண்மையின்னே
சரம்பற்றியசாபம்விடுந்தனையே. (க0க)

வானாளபவர்மைந்தனவளைதந்தவிலனை
தானேவரினன்றுபெரிதால்
நானேயவனுய்யப்பணிந்தனனாலே
போர்கீடிதென்றுபுகன்றிடலும் (க0உ)

கேட்டானிருதாக்கிறைசெற்றமொடு
வாட்டாரைநெருப்புகவாய்மடியா
ஒட்டாயிவையீயுமைசெய்குநராக
காட்டாயகடிதென்றுகனன்றுமையா. (க0ங)

வரும்புண்டம்வாளியின்மாபுருவிப
பெரும்புண்டிறவாவகைபேருதிநீ
இரும்புண்டநீராகினுமென்னுடையிற
கரும்புண்டசொ[illegible]ளிவனாண்டுடம். (க0ச)
(மிவ ர.)

என்னுமளவிற்பயமுனிவி டிடெ யத
அன்னமடங்கினடுக்ராமகிபக்க பாக்கை
சின்னமமுறமியமெ முதேசிலையேந்தநங்கள
மன்னனமகனவந்திலனென்றுவருந்தலனே. (க0ரு)

முத்துக்கனபோனமுகத்தாலிமுலைக்கண்வீழ்த
தத்துறறயமறலைதாலபுலத்திலேனும்
கொத்தொப்பனகொண்டிவனகொண்டனவென்றவாசை
பத்திருகுமினரேபலியீவதுபார்த்தியென்றுன். (க0சு)

இடிபபொத்தமுழக்கினிருஞ்சிறைவீசியெற்றி
முடிபபத்திகளைப்படியிட்டுமுழுதுருத்துண்டம்
கடிப்புக்கடிதுறறுவனகாண்டகுநீண்டவீணைக்
கொடிப்பற்றியொடித்துயாவானவராகிகொண்டான. (க0எ)

அக்காலையரக்கனரகருக்கன்னகண்ணன
எக்காலமுமின்னதொட்டிழிவுற்றிலாதான
நக்கானுலகேழுநடுங்கிடநாதனன்ன
மைக்கார்முகத்தோடெகைபடப்புருவங்குனித்தான.

சண்டப்பிறைவாளெயிற்றான் சரதாரைமாரி
கொண்டுச்சிறகாலடித்தான் சிலவள்ளுகிரால்
கண்டப்படுத்தான் சிலகாலனுங்காண்வுட்கும்
துண்டப்படையாற்சில நண்டதுண்டங்கள்கண்டான். (கOக)

மீட்டுமனுநாவெடுவெங்கணரந்தராகம்
வாட்டுமுகலுமென்னவன்றலைபத்தின்மீதும்
நீட்டுங்கெடுமூக்கினுநேமியன்சேமவிற்கால்
கோட்டும்மளவின்மணிக்குண்டலங்கொண்டெழுந்தான். (ககO)

எழுந்தான்றடமார்பினிலேழிளேடுவாளி
அழுந்தாதுகழன்றிடப்பெய்தெடுத்தார்த்தரக்கன்
பொழிந்தான்புகர்வாளிகண்மீளலும்போர்ச்சடாயு
விழுந்தானெனவஞ்சினர்விண்ணவர்வெய்துயிர்த்தார். (ககக)

புண்ணிற்புதுநீர்பொழியப்பொலிபுள்ளின்வேந்தன்
மண்ணிற்கரனேமுதலோருதிரத்தின்வாரி
கண்ணிற்கடலென்றுநுகர்ந்ததுகான்றுமீளா
விண்ணிற்பொலிகின்றதொர்வெண்ணிறமேகமென்ன. (ககஉ)

ஒத்தானுடனேயுயிர்த்தானுருத்தானவன்றோள்
பத்தோடுபத்தினெடும்பத்தியிற்றத்திமூக்கால்
கொத்தாகத்தாற்குடையாச்சிறையாறபுடையா
